சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2015–2016 – கல்வி – விடுதிகள் – பழங்குடியினர் நல விடுதி மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண்.8

நாள்.08.01.2016
திருவள்ளுவர் ஆண்டு 2046
மார்கழித்திங்கள் 23–ஆம் நாள்
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.த1/24811/2015 நாள்.30.09.2015.

ஆணை:

2015–2016–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "42 பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 2,782 மாணாக்கர்களுக்கும், 306 உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் 30,933 மாணாக்கர்களுக்கும், அவர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் வண்ணம் துருப்பிடிக்காத ஸ்டீல் தட்டும் மற்றும் குவளைகள் ரூ.52 இலட்சம் செலவில் வழங்கப்படும்."

2. இது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1314 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளும், 306 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கிவருகின்றன என்றும், அதில் மொத்தம் 1,31,754 மாணவ, மாணவியர் தங்கி கல்வி பயின்று வரும் இவர்களுக்கு சரி விகித உணவுப் பட்டியலில் உள்ளபடி உணவு வழங்கப்பட்டு வருவதாகவும், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் அவரவர் வசதிகளுக்கு ஏற்ப தட்டு மற்றும் டம்ளர் பயன்படுத்தி வருவதாகவும், மாணவ/மாணவியரிடம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் நோக்கோடு பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயின்று வரும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவது மிகவும் அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார். 42 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 306 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் 33,715 மாணவ, மாணவியருக்கு ஒரு தட்டு மற்றும் டம்ளர் தலா ரூ.150/– வீதம் திறந்த வெளி ஒப்பந்த முறையில் வாங்கி வழங்கிடத் தேவைப்படும் தொகை ரூ.50,57,250/– (ரூ.150X33715) நிதியினையும் ஒதுக்கீடு செய்யுமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–இல் உள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, 42 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 305 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் 33,715 மாணவ, மாணவியருக்கு அவர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் வகையில் எவர்சில்வர் தட்டு ரூ.75/– மற்றும் டம்ளர் ரூ.35/– ஆக மொத்தம் ஒருசெட் தலா ரூ.110/– வீதம் (ரூ.110X33715) ரூ.37,08,650/– (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) செலவில் வாங்கி வழங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய தட்டு மற்றும் டம்ளர்களை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி விதிகளை அனுசரித்து வாங்க வேண்டும்.

(ii) அந்நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும் பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தட்டு மற்றும் டம்ளர்களை கொள்முதல் செய்யவும், அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும்பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் தட்டு மற்றும் டம்ளர்களை வாங்கிவிட்டு மீதத் தொகை அரசுக்கு சரண் செய்யப்படுதல் வேண்டும்.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத்தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| கணக்குத் தலைப்பு | மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277–கல்வி–I திட்டத்தில் சேராதது–AA பள்ளிக்கல்வி–24 பொருட்களும் வழங்குதலும்". (கு.தொ.கு.2225–02–277–AA–2408 ). | 25162 | 25162X110 =ரூ.27,67,820 |
| "2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02–பழங்குடியினர் நலன்–277 கல்வி–I திட்டத்தில் சேராதது–AW மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும், பராமரித்தலும்–24 பொருட்களும் வழங்கலும்" (கு.தொ.கு.2225 02 277 AW 2404). | 3484 | 3484X110 =ரூ.3,83,240 |

| | | |
|---|---|---|
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277–கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JY-பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப்பள்ளிகளை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்–24 பொருட்களும் வழங்கலும்" (த.தொ.கு.2225–02–277–JY–2401) | 2342 | 2342X110 =ரூ.2,57,620 |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277–கல்வி–I-திட்டத்தில் சேராதது–AF-பழங்குடியினர் மாணவர் இல்லங்களைப் பராமரித்தல்–24 பொருட்களும் வழங்கலும்" (த.தொ.கு.2225–02–277–AF–2408) | 1368 | 1368X110 =ரூ.1,50,480 |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277–கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JU பழங்குடியினர் மாணவர்களுக்காக அரசு மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல் –24 பொருட்களும் வழங்கலும்". (த.தொ.கு.2225–02–277–JU–2409 ) | 1359 | 1359X110 =ரூ.1,49,490 |
| மொத்தம் ( 2782+30933) | 33,715 | ரூ.37,08,650 |

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுத் துணைப்பணி' குறித்த (New Instrument of Service) செலவினமாகும். இச்செலவினத்திற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரை நடப்பாண்டிற்கு தேவையான தொகையை சரியாகக் கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2015–2016–ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகளில் நிதியொதுக்கத்தில் சேர்க்க ஏதுவாக விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி(வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ஆதிதிராவிடர் நல இயக்குநர் பெற்று, அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி, இயக்கக அளவில் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Centralised Tender) மூலம் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணையின்படி பழங்குடியினர் நல விடுதி மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.69699/நிதி (ஆதி(ம)பந)/2015, நாள்.05.01.2016 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1854 (ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கு) பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-35/9/18.
நகல்:-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-7) துறை, சென்னை-9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ-I/வ.செ.பொ-II)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.